மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජාතිකයා

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

மலர் | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 02.01.2024 | பக்கங்கள் 08



# இமாலயப் பிரகடனம் அரசியல் பித்தலாட்டமே!

பக்கம் 7

## விசுவநாதன் ருத்திரகுமாரன் தெரிவிப்பு.



# சீனாவினுடைய பணத்திற்கு அடிமையாகியதால் கடலை விற்பதற்கு துணை போகின்றார் அமைச்சர் டக்ளஸ்!!



## அன்னராசா பகிரங்க குற்றச்சாட்டு!

பக்கம் 3



பக்கம் 6

## ரணில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலை ஏற்படும்!

சிறீதரன் எம்.பி எச்சரிக்கை!

## யாழ் மாநகர சபையின் பவளவிழா!




பக்கம் 5

## ஜனாதிபதித் தேர்தலில் ஈ.பி.டி.பியின் ஆதரவு ரணிலுக்கு!

அமைச்சர் டக்ளஸ் உறுதி.



பக்கம் 8

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய புதிய நிர்வாகம் தெரிவு!




பக்கம் 3

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதார நெருக்கடி படிப்படியாகக் குறையும் என்று தெரிவித்திருக்கிறது.

2024 புதுவருடத்தின் முதலாவது நாளிலிருந்து அமுலுக்கு வந்திருக்கும் புதிய வரி நடைமுறைகள் மக்களை கலங்க வைத்திருக்குக்கிறது என்றே சொல்லலாம். ஆனால், கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

2023 மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் நேர்மறையாகியது. 2022 இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி 2023இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு கிடைத்த 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 220 மில்லியன் டொலர், உலக வங்கியிடமிருந்து கிடைத்த 250 மில்லியன் டொலர் என 4 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பு பேணும் இலக்கை அண்மித்து விட்டோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அரசாங்கத்தினதும் அரச தரப்பினரதும் கூற்றுகள் கருத்துக்கள் நம்பிக்கையூட்டுவதாக இருந்தாலும் மக்களை நெருக்கடிக்குள்ளேயே வைத்துக்கொண்டு அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற முனைவதே பாதகமான முடிவைத்தரலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் 5 வீதத்தை விட குறைந்துள்ளது. இது புதிய வரித்திருத்தத்தால் சாத்தியமாகும். அரசின் 2023இல் எதிர்பார்ப்பு வருமானம் 2857 பில்லியனாக இருந்தபோதும் 3110 பில்லியன் கிடைத்தது. 2024இல் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும் 2026இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயரும் என்பவையெல்லாம் அரசின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாக இருக்கிறது.

கடந்த வருடங்களில் வரியிறுப்பாளர்களது வீழ்ச்சிகாரணமாக அரசுக்கு பாரதூரமான வருமான இழப்பு காணப்பட்டிருந்தது. ஆனால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரி அடையாள இலக்க நடைமுறையானது மக்களுக்கு நெருக்கடியானதாக இருந்தாலும் திட்டமிடப்பட்ட வகையில் அரசுக்கு வருமானத்தினை அதிகரிக்கும். இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 1.8 - 2 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்றெல்லாம் அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இருந்தாலும் பாதிக்கப்படும், நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு நிவாரணங்களையும் நெருக்கடித் தணிப்புக்கான வழிகளையும் எவ்வாறு முன்வைத்திருக்கிறது என்பதே கேள்வியாக இருக்கிறது.

பெறுமதிசேர் வரியை அதிகரித்துவிட்டு மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைப்பதற்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கவுள்ளோம் என்று கூறுவதில் எந்தளவுக்கு சமப்படுத்தல் உள்ளது என்பதே கேள்வி.

கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. அவை முழுமையாக சீர் செய்யப்படவில்லை. ஆனால், கடந்த வருடத்தினைப் போன்று இவ்வாண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. இதில் எவ்வாறான குழப்பங்கள் ஏற்படும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

நலன்புரித்திட்டங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சரியான நிதி முகாமைத்துவத்துடனான வேலைத்திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் மக்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும் முக்கியமானது. அது எவ்வாறு நடைபெறும் என்பதுதான்.

அதனால்தான், விமர்சனங்களுக்கப்பால், மக்களை தன்னம்பிக்கையால் நிரம்பி வழியச் செய்வது கட்டாயமாகிறது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய புதிய நிர்வாகம் தெரிவு!




ஒன்றிய புதிய நிர்வாகம் தெரிவாகி பொறுப்பேற்றுள்ளது. குறித்த நிர்வாகத் தெரிவு நேற்றையதினம் (1.1.2024) இடம்பெற்றுள்ளது.நிர்வாக உறுப்பினர்கள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவராக கு.துவாரகன் முகாமைத்துவ பீடத்திலிருந்தும், செயலாளராக சோ.சிந்துஜன் கலைப் பீடத்திலிருந்தும், பொருளாளராக கிந்துஜன் விஞ்ஞான பீடத்திலிருந்தும் ஏனைய உறுப்பினர்கள் ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த முறை அ.விஜயகுமார் தலைமையிலான நிர்வாக உறுப்பினர்கள் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவினுடைய பணத்திற்கு அடிமையாகியதால் கடலை விற்பதற்கு துணை போகின்றார் அமைச்சர் டக்ளஸ்!!

**வடக்கு மீனவர்களுடைய பிரச்சனையை யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வெளிக்கொண்டு வராமல் மூடி மறைப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது ஆதரவாளர்களைக் கொண்டு கூட்டத்தை நடாத்தியதாக ஊர்காவற்றுறை கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளர் அ.அன்னராசா குற்றம் சாட்டியுள்ளார்.**



வடக்கு மீனவர்கள் பிரச்சனையை மூடி மறைத்து சீனாவுக்கு கடலை விற்பதற்கு இவர்கள் துணை போகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொண்ட வர்கள் அரசியல் பின்புலத் தோடு கலந்து கொண்டவர்கள். அதில் ஒருவரை தவிர ஏனைய அனைவரும் கிராமப் புறத்தில் கூட ஒரு சங்கத்தில் இல்லை, மீனவ சங்கத்தில் இல்லாத வர்கள் கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்கள்தான் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார்கள். ஒரு அமைப்பில் இருந்து ஒருவர் என்றால் இரண்டு அமைப்புகளில் இருந்து மூன்று நபர்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் எப்படி இடம் கொடுப்பார். இதனால்தான் நாங்கள் சொல்லுகின்றோம், வடக்கில் அரசியல் நோக்கத்தோடு மீனவர்கள் பிரச்சனையை மூடி மறைத்து சீனாவுக்கு கடலை விற்பதற்கு இவர்கள் துணை போகின்றார்கள். சீனாவினுடைய பணத்திற்கு அடிமையாகியதால் தான் இந்த செயற்பாடுகள் நடக்கின்றது. அதனால்தான் நான் சொல்லுகின்றேன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பிரதேச ரீதியாக மீனவர்களுடைய பிரச்சனையை எடுத்து மாவட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நடந்த சம்பவத்தை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது, ஏனென்றால் இந்திய மீனவர்களுடைய பிரச்சனை அதைவிட மேலதிகமான பிரச்சனையாக தீவகம் அல்லாடி கொண்டிருக்கின்றது. **டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக இருந்து கொண்டு எங்களுடைய பிரச்சனையை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வெளிக்கொண்டு வராமல் மூடி மறைப்பதற்கு தனது ஆதரவாளர்களை வைத்துதான் அந்தக் கூட்டத்தை நடாத்துகின்றார்கள் என அ. அன்னராசா பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.**

# மற்றுமொரு வரி அதிகரிப்பு! வெளியானது வர்த்தமானி அறிவித்தல்

மதுபானங்கள் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பான அறிவித்தலை நிதி அமைச்சு வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளது.இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

**வரி அதிகரிப்பு விபரம்**

அதன்படி, அதி விசேஷம் சாராயம் மீதான கலால் வரி லீட்டருக்கு 840 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.மற்றுமொரு வரி அதிகரிப்பு: வெளியானது வர்த்தமானி அறிவித்தல் ; Increase In Excise Duty அதேபோல், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் மீதான கலால் வரி 900 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# எரிவாயுவின் விலையில் சடுதியான மாற்றம்! உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிப்பு




லிட்ரோ எரிவாயு நிறுவனம் எரிவாயு விலையை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித் துள்ளது. இதன்படி நேற்று (1.1.2024) முதல் எரிவாயு விலையை அதிகரிக்க தீர்மானித் துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். இதற்கமைய, 2.3 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 127 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 795 ரூபாய் என நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

**விலை அதிகரிப்பு**

5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 276 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 1,707 ரூபாய் ஆகும். மேலும், 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 685 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 4,250 ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது.குறித்த விலை அதிகரிப்பு இன்று முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

# டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் இன்றைய நாணயமாற்று வீதம்





இலங்கை மத்திய வங்கி நேற்றைய நாளுக்கான (01) நாணயமாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 319 ரூபாய் 23 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 328 ரூபாய் 77 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 404 ரூபாய் 77 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 420 ரூபாய் 27 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 350 ரூபாய் 46 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 364 ரூபாய் 75 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 239 ரூபாய் 03 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 249 ரூபாய் 87 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. அவுஸ்ரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 215 ரூபாய் 35 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 225 ரூபாய் 94 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 240 ரூபாய் 07 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 250 ரூபாய் 85 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது. வங்கிகளில் இன்றைய நிலவரம் அதேபோல் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளும் டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதிகளை வெளியிட்டுள்ளன. அதன்படி மக்கள் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 317.99 ரூபாயிலிருந்து 318.14 ரூபாயாகவும் விற்பனைப் பெறுமதி 329.08 ரூபாயிலிருந்து 329.23 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.. கொமர்ஷல் வங்கியின் கூற்றுப்படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 317.02 ரூபாயாகவும் விற்பனைப் பெறுமதி 328 ரூபாயாகவும் மாறாமலுள்ளது. சம்பத் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதிகள் முறையே, 318.50 ரூபாய் மற்றும் 327.50ரூபாயாக மாறாமலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாநகர சபையின் பவளவிழா! முன்னாள் முதல்வர்கள் கௌரவிப்பு!




யாழ் மாநகர சபையின் 75 ஆவது ஆண்டின் பவளவிழா நேற்று யாழ்ப்பாண மாநகர சபையின் முன்றலில் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இவற்றில் 28 வட்டாரங்களில் 28 மாநகர முதல்வர்கள் 17ஆணையாளர்கள் கடமையாற்றியவர்களில் மதிப்புரியவர்களாக காணப்படுகின்றனர். இதில் முன்னாள் மாநகர முதல்வராக கடமைபுரிந்த 04 மாநகரசபை முதல்வர்கள், முன்னாள் ஆணையாளர்கள், சமகாலத்தில் ஆணையாளராக கடமை புரிந்தவர்களுக்கு பவள விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. இவ் நிகழ்வில் யாழ் மாநகர செயலாளர் த.தயாளன், பிரதமகணக்காளர் திருமதி.ம.வசந்தமாலா உள்ளிட்ட மாநகர சபை பதவி நிலை அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.








# ரணில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலை ஏற்படும்! சிறீதரன் எம்.பி எச்சரிக்கை!



வட் வரி அதிகரிப்பானது மிகவும் பொருளாதார இக்கட்டான நிலையிலுள்ள மக்களை பெரிதும் பாதித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் மக்களுக்கு வருமானம் இல்லை மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப் படுகிறது. அறகலய போராட்டம் போன்ற அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலைக்கு வழியேற் படும். சுயமாக மக்களின் நலன்களை பற்றி அரசு சிந்திக்காது சர்வதேச நாணய நிதியத்திற்காகவே செயற்படுகிறது. தேர்தல் பிரச்சாரத்திற்கான ஆயத்த மாகவே ஜனாதிபதி வருகை உள்ளது. பிரச்சனையை பாராளுமன்றத்திலேதான் தீர்க்க முடியும் என்கிறார். கட்டிடம் கட்டி தாறன் கைத்தொழில் பேட்டை அமைக் கிறேன் என்று மாத்திரம் சொல்லதற்காக வருகிறார். வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கிய காசுக்கு ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், தேர்தலும் நடைபெறவில்லை. தமிழ் மக்களின் ஆதரவை எப்படி பெறுவது என்ற நோக்கத்தோடு தான் அவர் வடக்குக்கு வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

# 106.6 வீதமாக வளர்ச்சியடைந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை.



கடந்த ஆண்டு டிசம்பரில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையைப் பார்த்த போதிலும், 2023 ஆம் ஆண்டிற்கான 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கை இலங்கை தவறவிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 1,487,303 சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இவர்களில் 210,352 பேர் கடந்த டிசம்பர் மாதத்தில் இலங்கை வந்துள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் 151,496 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். 2023 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இலக்கான 1.5 மில்லியனை அடைவதற்கு சுற்றுலாப் பயணிகளில் 12,697 சுற்றுலாப் பயணிகளின் வருகையே குறைவாக உள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, 2023 ஆம் ஆண்டில் நாடு கிட்டத்தட்ட 1.5 மில்லியன் வருகை இலக்கை எட்டிவிடும் என்று கடந்த சனிக்கிழமை கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்திற்கு 48 ஆயிரத்து 223 மில்லியன் நிதி ஒதுக்கீடு!



2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 48ஆயிரத்து 223 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தில் ஆளுநர் நேற்று கையொப்பமிட்டார். இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு முதல் கட்டமாக நேற்று 101 நலத்திட்டங்களையும் ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலமைச்சின் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றம் , கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆணையம்,சுற்றுலா பணியகம், கட்டிடத் துறை வீட்டுவசதி ஆணையம்,மாகாண திட்டமிடல் செயலகம், மாகாண பொது நிர்வாகம்,கூட்டுறவு அபிவிருத்தி மீன்பிடி அமைச்சு,கல்வி மற்றும் கலாச்சார, முன்பள்ளி கல்வி பணியகம்,விளையாட்டு அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சுகளுக்காக 101 நலத்திட்டங்கள் ஆளுநரால் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது .

# இமாலய பிரகடனம் என்ற பெயரில் இடம்பெற்றது அரசியல் பித்தலாட்டமே..!

## விசுவநாதன் ருத்திரகுமாரன் தெரிவிப்பு!



**கடந்த ஆண்டில் அனைத்துலக அரசுகள் சிலவற்றின் அரவணைப்புடன் இமாலய பிரகடனம் என்ற பெயரில் இடம்பெற்றது அரசியல் பித்தலாட்டமே என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.** மேலும், அக்கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து 2021 செப்டம்பர் மாதம் 23 உருவாக்கிய பொதுநிலைப்பாடுகள் எந்த ஒரு அரசியல் தீர்விற்கும் வகிபாகமாக இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

### கேந்திர முக்கியத்துவம்

மேலும் 2024 இல் பல முக்கிய இடங்களில் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்திய தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கசெய்து அவற்றை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புகள் குறித்து தமிழ் மக்கள் கவனம் கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ளார். இலங்கையின் அதிபர் தேர்தல் குறித்து தெரிவித்துள்ள அவர் தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையிலிருந்து கொண்டு தேர்தலை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து சிந்திக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். தற்போது பலஸ்தீனத்தில் நடைபெறும் அனர்த்தங்கள் ஐக்கிய நாடுகள் உட்பட சர்வதேச அமைப்புகள் நீதியை நிலைநாட்ட திராணியற்றவை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உலகில் நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட புதிய பொறிமுறைகளையும் புதிய நியதிகளையும் உருவாக்குவதற்கான முயற்சியில் உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள் அனைத்துலக சிவில் சமூகம் அறிவு ஜீவிகள் சமூகவலைத்தளங்கள் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இமாலய பிரகடனம்

எமது சூழலை எடுத்துக்கொண்டால் கடந்த ஆண்டில் அனைத்துலக அரசுகள் சிலவற்றின் அரவணைப்புடன் இமாலய பிரகடனம் என்ற பெயரில் இடம்பெற்ற அரசியல் பித்தலாட்டம் ஒன்றையும் காணமுடிந்தது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் தெரிவித்துள்ளார். இம்பிரகடனமும் அதனை தொடர்ந்து இடம்பெற்ற காட்சிகளும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் நன்மை கருதியதாக தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் டயஸ்பொறாவின் தமிழ்தேசிய நிலைப்பாட்டையும் தமிழ்தேசத்தின் சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்கு சார்பான நிலைப்பாட்டையும் நீர்த்துப்போகச்செய்ய விரும்பும் முயலும் அனைத்துலக அரசுகள் சில தமக்கு சேவை செய்யக்கூடியவர்களை இந்த பிரகடனத்திற்காக தெரிவு செய்துள்ளதாக தெரிகின்றது என குறிப்பிட்டுள்ள அவர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் எவரும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அரசியல் விருப்புகளை பிரதிபலிப்பவர்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இதனால் இவர்களின் எந்த பிரகடனமும் தமிழ் மக்களிற்கு ஒரு பொருட்டு இல்லை இதனை தாயகத்திலும் டயஸ்பொறாவிலும் இருந்து வந்த கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுட்டுக் கொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் நினைவேந்தல்!

கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களது 16வது ஆண்டு நினைவேந்தல் நேற்றையதினம் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் திரு.விஜிமருதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் இறைவழிபாடுகள் இடம்பெற்று தேவாரம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஈகைச் சுடரேற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் மதகுருமாரின் ஆசியுரைகள் மற்றும் நினைவுப் பேருரைகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் மதகுருக்கள், கட்சியின் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஈ.பி.டி.பியின் ஆதரவு ரணிலுக்கு!

## தமிழ் வேட்பாளர்கள் என்பது பயனற்ற கதை என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கும். தமிழ் வேட்பாளர் என்பது பயனற்ற கதை என்று கடல்தொழில் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.** வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர். ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் இறுதியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஈ.பி.டி.பியைப் பொறுத்த வரையில் இன்று இருக்கக் கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். ஏனெனில் எமது நாடு பொருளா தாரத்தில் ஆதல பாதாலத்துக்குச் சென்ற போது. அதே நேரம் வன் முறைகளும் தலைவிரித்தாடிய போது எவரும் முன் வந்து நாட்டை பொறுப் பெடுக்கவில்லை. தயங்கினர். இந்த நிலையில் ரணில் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் முன் வந்தவர். அவர் பிரேக் டவுன் ஆகிய பேருந்து ஒன்றையே எடுத்திருந்தார். இன்று டிங்கரிங் செய்து ஓட வேண்டிய நிலைமையில் அது வந்துள்ளது. மற்றபடி அனைத்துப் பிரச்சினைகளும் சரி செய்யப்பட்டுவிட்டன. எனவே அவரோடு பயணிக்க வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். **தமிழ் வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பு என்பது இந்த நாட்டில் இல்லை. ஆகவே தென் இலங்கையில் வென்று வரக்கூடிய ஒரு வேட்பாளரை நாட்டை வழிநடத்தக் கூடிய வகையில் நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒருவருடனேயே நாம் பயணிக்க வேண்டும். அவருடனேயே நாம் பேசவும் வேண்டும். தமிழ் வேட்பாளர் என்பதெல்லாம் ஒரு பூச்சாண்டிக் கதையும் பயனற்ற விடயமும்தான். அதை நாம் ஒரு கருத்தாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்றார்.**

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.

கிருபா லேணர்ஸ்
කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS




- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |